Registered as a News Paper பக்கங்கள் 6 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 மாசி 20 [03 - 3 - 1993] புதன்கிழமை ஓசை 13

## தலைவரின் பேட்டிக்கு பெரும் முக்கியத்துவம்

தமிழீழ தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பி.பி.ஸி. செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டிக்கு உலக செய்தி நிறுவனங்கள் பெரும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. குறிப்பாக பிரெஞ்சு செய்தி நிறுவனம் இப்பேட்டிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்திருந்ததாக அச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

# தாயகமும் தன்னாட்சியும் கொண்ட சமஷ்டியை பரிசீலிக்க தயார்

## பி. பி. ஸி.க்கு தலைவர் பேட்டி



[லண்டன்]

"தமிழர் தாயகத்தின் பூகோள முழுமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி அமைப்புமுறை முன்வைக்கப்பட்டால் அதனைப் பரிசீலனை செய்ய நாம் தயார். சமஷ்டி ஆட்சிமுறை பல வடிவங்களில் உள்ளன. இவற்றில் அதிகாரப் பரவலாக்கமும் வெவ்வேறு பரிணாமங்களில் அமையப்பெற்றுள்ளன. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தன்னாட்சி அதிகாரங்கள் அமையப்பெற்ற ஒரு சமஷ்டி ஆட்சித்திட்டம் முன்வைக்கப்பட்டால் அதனை நாம் பரிசீலனை செய்வோம்"

இவ்வாறு தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் பி.பி ஸி.க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். அண்மையில், யாழ். வந்த பி.பி.ஸி அறிவிப்பாளர் ஆனந்திக்கு வழங்கிய பேட்டியை முழுமையாக இங்கே தருகிறோம்.

### பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழருக்கு நம்பிக்கையில்லை

**கேள்வி:** இன்றைய அரசியல் இராணுவ நிலைபற்றி விளக்குவீர்களா?

**பதில்:** தற்போதைய அரசியல் இராணுவ நிலைமையைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்கதாக எதையுமே சொல்லமுடியாது.

அரசியல் சூழ்நிலையைப் பொறுத்தவரை, வழக்கம்போல ஒரு மந்த நிலைதான் நிலவுகிறது. தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்வித சமாதான முயற்சிகளும் எடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. இவ்விடயத்தில், புதிதாக எந்தவித நகர்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கையில் சிறிலங்கா அரசாங்கம் பெரிதாக நம்பிக்கை வைத்திருப்பது போலத் தெரிகிறது. ஆனால் பாராளுமன்றத் தெரிவுக்குழு நமது பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை முன்வைக்கும் எனத் தமிழ்மக்கள் நம்பவில்லை ஏனென்றால், தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் பிரதான சிங்களக்கட்சிகள் தமிழரின் அடிப்படைக் கோரிக்கைகள் எதையுமே ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இராணுவத்தைப் பொறுத்தவரை பெரிய படையெடுப்புகளுக்கு தன்னைத் தயார் செய்து வருகிறது. சென்ற ஆண்டு எதிர்கொண்ட பெரிய பின்னடைவுகளைத் தொடர்ந்து ஆயுதப் படைகளை நவீனமயப்படுத்தி, பலப்படுத்த சிறிலங்கா அரசாங்கம் தீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது. யுத்த அரங்கில் நவீன ஆயுதங்களைப் பிரயோகித்து புலிகளை தோற்கடிக்கலாம் என சிறிலங்கா அரசாங்கம் தப்புக்கணக்குப் போடுகிறது.

ஒட்டுமொத்தத்தில், தமிழர் தேசிய பிரச்சினை சம்பந்தமாக சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

### மேற்குலக உதவி நின்றால் போருக்கு முடிவு வரும்

**கேள்வி:-** யாழ்ப்பாணத்தின் மீது உணவு, மருந்து, எரிபொருள் ஆகியவற்றின் மீது அரசு விதித்துள்ள தடையின் விளைவாக மக்கள் பெரும் இன்னல்களுக்கு ஆளாகியுள்ளனர். இப்படிப்பட்ட சூழ்நிலையில் போர் இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கப்போகிறது?

**பதில்:-** போரை நீடிப்பதும், நிறுத்துவதும், சமாதான வழியில் தீர்வு காண்பதும் - எல்லாமே சிறிலங்கா அரசாங்கத்தின் முடிவில்தான் தங்கியிருக்கிறது. இந்தப் போரை தொடக்கியதும், இந்தப் போரை நீடித்துச் செல்வதும் சிறிலங்கா அரசாங்கமே. தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வில் நம்பிக்கை கொண்டிருப்பதும் சிறிலங்கா அரசாங்கமே!

இந்தப் போருக்கு ஒரு முடிவைக் கொண்டுவந்து, சமாதான வழியில் பிரச்சினையை தீர்த்துவைக்குமாறு, நாம் பல தடவைகள் கோரிக்கைகளை விடுத்தும் சிறிலங்கா அரசாங்கம் அதற்கு செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை. பதிலாக, போரைத் தீவிரப்படுத்துவதிலும், மக்கள் மீது பொருளாதார நெருக்குதலை அதிகரிப்பதிலுமே சிறிலங்கா அரசாங்கம் முனைப்புடன் செயற்படுகிறது.

இந்தப் போர் தமிழ் மக்களுக்கு எதிராகவே ஏவப்படுகிறது. தமிழ் மக்களை அழிவிற்கும் துன்பத்திற்கும் ஆளாக்கி, அவர்களது மனவுறுதியை உடைத்து, அவர்களது போராட்ட உணர்வை மழுங்கடித்து, அவர்களை அடிமைகொள்வதே சிங்களப் பேரினவாதிகளின் நோக்கம்

இந்த இன அழிப்பு யுத்தத்திற்கு மேற்குலகம் மறைமுகமாக உதவி செய்து வருகிறது. மேற்குலக கடனுதவியை ஆதாரமாகக் கொண்டே சிறிலங்கா அரசு இந்தப் போரை தொடர்கிறது. பணமாகவும், ஆயுதங்களாகவும் மேற்குலம் வழங்கிவரும் உதவிகள் நிறுத்தப்பட்டால் இந்த யுத்தத்தை அரசாங்கத்தால் தொடர முடியாது. அதன்பின்னரே சமாதானத்திற்கான சூழ்நிலை பிறக்கும்.

### வீரமும் விடுதலைப் பற்றும் வெற்றியை நிர்ணயிக்கும்

**கேள்வி:** அரச தரப்பு படைகளின் எண்ணிக்கை 80,000. உங்களின் பலம் 10,000 எனக் கணிக்கப்படுகிறது. இந்த சமபலமற்ற நிலையில் போரில் வெற்றியீட்ட முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு உண்டா?

**பதில்:** ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆட்பலமோ, ஆயுத பலமோ அல்ல. உலக விடுதலைப் போராட்ட வரலாறுகள் இதற்கு சான்று பகிரும்.

பாரிய ஆட்பலமும், ஆயுதபலமும் கொண்ட உலக வல்லரசுகள் வியட்னாமிலும் ஆப்கானிஸ்தானிலும் தோல்வியைச் சந்திக்கவில்லையா?

அசைக்க முடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப் பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள். இந்த குணாம்சங்கள் எமது போராளிகளிடமும், பொதுமக்களிடமும் நிறையவுண்டு.

**கேள்வி:** இலங்கைப் படையினர் பல நவீன ஆயுதங்களை வாங்கியுள்ளதாக கூறப்படுகிறது. இதற்கு ஈடுகொடுக்க உங்களால் முடியுமா?

**பதில்:** சிங்கள ஆயுதப் படைகள் காலத்திற்கு காலம் நவீன ஆயுதங்களை அறிமுகம் செய்து வருகின்றன. புதிய ஆயுத தளபாடங்களை புகுத்தும் பொழுது எல்லாம் வெற்றிகளை அடைந்து விடலாம் என அரசாங்கம் எண்ணிக்கொள்கிறது. மாசெட்டி விமானங்களை வாங்கிய பொழுதும், பின்னர் டாங்கிகளை வாங்கியபொழுதும் இப்படியாகத்தான் எண்ணினார்கள் இப்பொழுதும் புதிதாக ஆயுத தளபாடங்களை வாங்கி குவிக்கிறார்கள். ஆனால் ஆயுதங்கள் வெற்றியை தீர்மானிப்பவை அல்ல. எழுச்சிகொண்ட மக்களை ஆயுத சக்தியால் அழித்துவிடமுடியாது.

### எதிரிப் படையிடமிருந்தே ஆயுதங்களைப் பெறுகிறோம்

**கேள்வி:** ஆயுதங்கள் உங்களுக்கு எங்கிருந்து கிடைக்கின்றன?

**பதில்:** ஆயுதங்களை நாம் எதிரிப்படையிடமிருந்தே பறித்தெடுக்கிறோம். எதிரியிடம் பறித்தெடுத்தஆயுதங்களைக்கொண்டே நாம் எதிரியுடன் போராடி வருகின்றோம்.

உதாரணமாக, சென்ற ஆண்டு யுத்தத்தில் ஏராளமான ஆயுதங்களை நாம் எதிரியிடமிருந்து கைப்பற்றினோம்.

சென்ற ஆண்டில், 1172 தானியங்கி துப்பாக்கிகள், 106 இலகு இயந்திரத் துப்பாக்கிகள்,4,50 கலிபர் கனரக இயந்திரத்துப்பாக்கிகள், 23டாங்கிஎதிர்ப்பு எறிகணை செலுத்திகள், 30 எறிகுண்டு செலுத்தும் துப்பாக்கிகள், 25 எறிகணை செலுத்திகள், 1 பின்னுதைப்பற்ற பீரங்கி, 1622 எறிகணைகள், 30தொலை தொடர்பு சாதனங்கள், 7 இலட்சம் ரவைகள்- இப்படியாக பெருந்தொகையான ஆயுதங்களை சிறிலங்கா இராணுவத்திடமிருந்து நாம் கைப்பற்றியிருக்கிறோம்.

### கிளாலி கடற்பரப்பு மீதான தடையை நீக்க வேண்டும்

**கேள்வி:** கிளாலிப்பாதை தடைசெய்யப்பட்டிருப்பதால் மக்கள் யாழ்ப்பாணத்திற்குச் செல்லவோ அங்கிருந்து வரவோ முடியாத ஓர் அவல நிலை ஏற்பட்டுள்ளது. இந்த விடயத்தில் புலிகளும், இலங்கை அரசும் ஓர் இணக்கத்திற்கு வந்தால் மக்கள் பயமின்றிப் பயணம் செய்ய முடியும். சங்குப்பிட்டி - கேரதீவுப் பாதையை திறந்து விடுவதற்காக அகதிகளுக்கான ஐ. நா. சபையின் அகதிகள் நலன்காக்கும் அமைப்பு எடுத்துவரும் முயற்சிகள் பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** கேரதீவு - சங்குப்பிட்டி பாதை போக்கு வரத்திற்கு திறந்துவிடப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். இராணுவ கெடுபிடிகள் இல்லாமல் மக்கள் சுதந்திரமாக இப்பாதையை பயன்படுத்த வேண்டும். அதற்கு இப்பாதையில் இராணுவ காவல் நிலைகள், சோதனைச் சாவடிகள் இருக்கக் கூடாது. அப்படியானால் இராணுவம் இப்பாதையிலிருந்து சிறிது தூரம் விலகிநிற்க வேண்டும். இதனை நாம் வலியுறுத்தினோம். ஆனால் இராணுவம் சிறிது தூரமாவது விலகிநிற்க தயாராக இல்லை. இப்பாதையூடாக பயணம் செய்யும் அனைவரையும் சோதனைக்குட்படுத்த இராணுவம் விரும்புகிறது. இது மக்களுக்கு, குறிப்பாக எமது ஆதரவாளர்கள் அனுதாபிகளுக்கு பெரும் ஆபத்தை விளைவிக்கும்.

இவ்விடயத்தில் இராணுவம் பிடிவாதமாக இருப்பதால் இப்பாதையை திறக்க அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் எடுத்த முயற்சி தோல்வி கண்டிருக்கிறது. எனவேதான், கிளாலி கடற்பரப்புமீது விதிக்கப்பட்ட தடையையாவது நீக்கிவிடுமாறு நாம் யோசனை கூறியிருக்கிறோம்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

நல்லூர் [illegible] நூலகம்

## வரி விளம்பரம்

**தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு**

எங்களிடம் சகல றேடியோக்கள், ரேப் றெக்கோடர்கள், மற்றும் மின்சார உபகரணங்கள், எலெக்றோனிக் ஓட்டோமற்றிக் கடிகாரங்கள், மேசை-சுவர் மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்; டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 3, கண்டி வீதி (இலங்கை வங்கி அருகாமையில்) சாவகச்சேரி. (சி-6082)

**பாடல் பதிவு**

நீங்கள் விரும்பும் பாடல்களை இப்போது கொம்பக்ட் டிஸ்க் மூலம் பதிவு செய்து பெற்றிட இன்றே வாருங்கள் ஷண் றெக்கோடிங் ஸ்பொட் பஸ்நிலைய வயிரவர்கோவில், அருகாமையில், நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம். (4068)

## வணிகதீபம்

வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவற்குழி மகா வித்தியாலய வணிக மாணவர்மன்றத்தினரின் ''வணிக தீபம்'' எனும் நூல் வெளியீட்டு விழா இன்று மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்குபிரதம விருந்தினராக சாவகச்சேரி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ. வீரபத்திரனும் சிறப்பு விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசாவும் கலந்துகொள்ளுகின்றனர்.

## குடிநீர் விநியோகம்

யாழ். மாநகர நீர்வழங்கும் பகுதி யுனிசெப் உதவியுடன் குருநகர் பகுதிக்கு குழாய் மூலம் பொதுமக்கள் குடிநீர் பெற வசதிகளை உருவாக்கி வருகின்றது.

யாழ். புனித யாகப்பர் ஆலயத்தில் உள்ள கிணற்றிலிருந்து தண்ணீர்ப் பம் மூலம் குருநகர் சனசமூக நிலையம், அண்ணாசிலை முன்பாக, புனிதர் யாகப்பர் ஆலயம் ஆகிய இடங்களில் மூன்று குழாய்கள் உருவாக்கி உள்ளது. மேலும் யாழ். மாநகர நீர் வழங்கும் பகுதியே இத்தண்ணீர் பம்மை வழங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இவ்வசதியை றெக்கிளமேசன், சென்றோக் பகுதி மக்களும் பெறக் கூடியவாறு ஒழுங்குகள் செய்யப்பட்டு வருவதாகவும் யாழ். மாநகர சபை தெரிவித்துள்ளது. (17)

## இன்று மாவுடன் "குமாரி"

[வடமராட்சி]

'குமாரி' கப்பல் மாவுடன் இன்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு வருகிறது. காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்க ஏற்பாடாகியுள்ளது. [யோ]

## செஞ்சிலுவை உணவு

[தென்மராட்சி]

கடந்த சில தினங்களாக கிளாலிப்பாதை சீரின்மையால் கிளிநொச்சிப் பகுதியில் உள்ள கந்தசாமி ஆலயத்திலும், கிறிஸ்தவ தேவாலயத்திலும் தங்கியுள்ள யாழ். பயணிகளின் இன்னல்களைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் கடந்த மாதம் 14 ஆம் திகதி முதல் இலவசமாக மூன்று நேர உணவு வழங்கி வருகின்றனர் என தெரிய வருகின்றது. [86]

## மரண அறிவித்தல்

### தம்பையா சிவப்பிரகாசம்

சங்கானையைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிவப்பிரகாசம் 21-02-93 ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸில் காலமாகிவிட்டார்.

இவர் குணேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்மராஜா, (பிரான்ஸ்), தனபாலு (கனடா), தர்மஜோதி (ஜேர்மனி), தர்மராணி (ஜேர்மனி), யோகேஸ்வரன் (ஜேர்மனி), தயாநிதி (பிரான்ஸ்), கலாநிதி (பிரான்ஸ்), மகாலக்ஷ்மி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாக்கியலக்ஷ்மி (பிரான்ஸ்), யோகா (கனடா), இந்திரன் (ஜேர்மனி), மகாதேவா (ஜேர்மனி), இந்திரஜித் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சிவபாக்கியம், சிவானந்தம், சிவஞானம், பரமேஸ்வரி, மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், வடிவம்மா, கனகசபை (றீகல் சவுண்ட்ஸ்), அருளானந்தம், சிவசோதி, காலஞ்சென்ற சிவக்கொழுந்து, காலஞ்சென்ற செல்வரெட்ணம், தங்கராசா (ஓய்வுபெற்ற யாழ். கச்சேரி அலுவலர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற ஆசிரியர் நடராசா, செல்வரெட்ணம் (ஓய்வு பெற்ற சீமேந்துக் கூட்டுத்தாபன நிர்வாக அதிகாரி) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் கடந்த 25-02-93 வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குணேஸ்வரி
(மனைவி)

12, ஈச்சமோட்டை
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-6128)

## வாழ்த்துகின்றோம்


மருதனார்மடம் கோட்டக் கல்விப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உடற்பயிற்சி இறுதிப் போட்டியில் பதினைந்து வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று இதுவரை கண்டிராத சாதனை புரிந்த—

கோப்பாய் நாவலர் வித்தியாலய மாணவர்கள், பயிற்றுவித்த ஆசிரியர்களை வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபை,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(4384)

## கண்ணீர் அஞ்சலி



சில்லாலை

டாக்டர் **சுகந்தன்**

**இன்னாசித்தம்பி**

சில்லாலை கிராம முன்னேற்றச் சங்கத்தலைவராய். சில்லாலை கதிரைமாதா கோவில் பங்குச்சபை செயலாளராக, சில்லாலை றோ. க. த. க. பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராக பலவருடங்களாக பன்முகப்பட்ட தொண்டாற்றி மறைந்த டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி அவர்களுக்கு சில்லையூர் சிரம்தாழ்த்தி கண்ணீர் வடிக்கின்றது.

(சி- 6123)

## கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி

**சுகந்தன் இன்னாசித்தம்பி**

[லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரி அதிபர்]

பத்துத் தலைமுறைகள்
சில்லாலையில்
சித்த வைத்தியம் புரிந்த
பரம்பரையின்
முத்தாய் திகழ்ந்த சுகந்தன்
பரிகாரி
இத்தரை வாழ்வை நீத்த
தறிந்து வாடுகிறோம்!
தக்க வைத்த
பரம்பரை வைத்தியம்
இத்தரையில் நீடு வாழும்!

**"ஒளி இல்லம்"**
210, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். [சி-6129]

## பயிலுநர் ஆசிரியருக்கு மண்ணெண்ணெய்

(பருத்தித்துறை)

தொலைக்கல்விபாடநெறிப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பயிலுநர் ஆசிரியர்களுக்கு வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் தலா இரண்டு லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் குறைந்த விலைக்கு விநியோகித்து வருகின்றது. (25)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்துரை கனகமுத்து

திருமதி சின்னத்துரை கனகமுத்து காலமானார். இவர் காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னத்துரையின் அன்பு மனைவியும், செல்வராசா (கனடா), சிவராசா (கனடா), ஜெயராசா(கனடா), திருமதி அற்புதநாயகி சரவணமுத்து (ஆசிரியை, மகளிர் மகாவித்தியாலயம், சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் குலேந்திரா, கலாவதி, ராதை ஆகியோரின் அன்பு மாமியும், திருமதி செல்லம்மா மாணிக்கம், திருமதி ஞானபூசணம் கணபதிப்பிள்ளையின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 03-03-1993 (இன்று) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அற்புதநாயகி
(மகள்)

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(4383)

## நினைவு கூருகின்றோம்...

## 1993-03-03

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி - கனகராயன்குளம், கரடிப்போக்குச் சந்தி ஆகிய பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

யாழ் - நயினாதீவுப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பெண் உட்பட 7 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு மட்டு - ஆரையம்பதிப் பகுதியில் தேசவிரோதக் குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**கௌசிகன்** [சனகசபை பிறேம்குமார் - ஆரையம்பதி - மட்டு.]

திருமலை - சாம்பல்தீவு இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்துச் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 14 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு யாழ் - உரும்பராய், கரந்தன் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையில் வீரச்சாவெய்திய -
(யாழ். மாவட்டத் தளபதி)

**லெப். கேணல் இம்ரான்** [சங்கரப்பிள்ளை சதானந்தன் - சிறீகரன் வீதி, கொக்குவில்-யாழ்)

**கப்டன் அனஸ்-ராஜன்** [நடராசா பிறேமானந்தன் - வீரபத்திரர் கோயிலடி, கோப்பாய் தெற்கு - யாழ்.]

**லெப். சூரியகுமார்** [இரங்கசாமி துளசிதாஸ் - கொண்டைக்கட்டை, வல்வெட்டித்துறை - யாழ்.]

**லெப். குணசீலன்** [இரத்தினம் முருகதாஸ் - வள்ளித்தோட்டம், தம்பசிட்டி, பருத்தித்துறை - யாழ் ]

1989 ஆம் ஆண்டு மணலாறு - நாயாற்றுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**ஜஸ்ரின்-சேவியர்** [தில்லையம்பலம் பற்குணராசா- 2-ம் பண்ணை, செட்டிகுளம் - வவுனியா]

**2-ம் லெப். கஸ்ரோ** [கணேசன் சந்திரமோகன் - வட்டக்கச்சி - கிளிநொச்சி]

**மேஜர் அரி** [காத்தலிங்கம் பிறேமசிறி - வத்திராயன் வடக்கு, தாழையடி - யாழ்.]

1991 ஆம் ஆண்டு கிளிநொச்சி - ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**மலையான்** [வேதநாயகம் அன்ரனி யேசுதாசன் - ஊறணி, காங்கேசன்துறை - யாழ்.]

1992 ஆம் ஆண்டு மணலாறு - மண்கிண்டிமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத் தொடர் காவலரண்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**மேஜர் சதாத்-வீமன்** [அமிர்தநாதன் அருளப்பு - அடம்பன் - மன்னார்]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-6121)

# கட்டணம் அறவிடும் முறைவரின் 3000 பாடசாலைகள் மூடப்படும்

## - தினேஷ் குணவர்தனா

(கொழும்பு)

கட்டணம் அறவிடும் முறை மீண்டும் அமுலுக்கு வந்தால் 3000 பாடசாலைகள் மூடப்படும் அபாயம் ஏற்படும் எனவே பாடசாலைகளில் புதிதாக கட்டணம் எதையும் அறவிடக்கூடாதென பாடசாலை அபிவிருத்திச்சபை சட்டமூலத்துக்கு திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று ம. ஐ. மு. தலைவர் தினேஷ் குணவர்த்தனா எம். பி பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனநாயகம் நிலவவேண்டுமானால் சகலருக்கும் கல்வி வாய்ப்பு சமமாகஇருக்கவேண்டும். ஒருசாரார் மட்டும்பணம் செலுத்தி கல்வி பெறும் நிலை இருந்தால் ஜனநாயகம் நிலவாது. பாடசாலை அபிவிருத்திச்சபை சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு மீது பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இப்போது அரசின் சகல நடவடிக்கைகளுக்கும் அவசரகாலச் சட்டமே கைகொடுக்கின்றது. அந்தச் சட்டத்தை பயன்படுத்தியே இந்த சட்டமூலமும் கொண்டுவரப்படுகிறது. பாடசாலை அபிவிருத்திச்சபை சட்டமூலம் இலவசக்கல்விக்கு வேட்டு வைக்கின்றது.

சங்கீதம் பிரான்ஸிய மொழி ஆகியவற்றை போதிக்க ஏற்கனவே கட்டணம் அறவிடப்படுகின்றது. இந்நிலையில் பணம் உள்ளோர் மட்டுமே கல்வி பெற முடியும் என்றார்.

# மாணவரிடம் வசதி கட்டணம் மட்டுமே அறவிடப்படும்

## ஏ. சி. எஸ். ஹமீத்

[கொழும்பு]

வசதிக் கட்டணத்தைத் தவிர பாடசாலை மாணவர்களிடம் வேறெந்தக் கட்டணத்தையும் அறவிடப் போவதில்லை என்று நீதி உயர்கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ் ஹமீத் பாடசாலை அபிவிருத்திச் சபைச் சட்டமூலம் மீதான விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றும்போது பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

பாடசாலை அப்விருத்திச் சபைகளை உலக வங்கியின் ஆணையின் ப்ரகாரமே நாம் அமைப்பதாகவும் மாணவர்களிடமிருந்து கட்டணம் அறவிடப் போவதாகவும் எதிரணியினர் கூறித் திரிகின்றார்கள். நாம் வேறு விடயங்களில் உலகவங்கியின் விதப்புரைகளைக் கேட்டுச் செயற்பட்டோம் உலகவங்கியிலும்' சர்வதேச நாணய நிதியத்திலும் அங்கம் வகிக்கும் நாடுகள் அவ்வாறு செயற்படுவது வழக்கம். ஆனால் பாடசாலை அபிவிருத்திச் சபைகள் விடயத்தில் நாம் எவரினதும் ஆணைப்படி செயற்படவில்லையென்றார்.

இளைஞர் அமைதியின்மைக்கான காரணங்களை ஆராய்ந்து ஆணைக்குழுவின் சுதந்திரமான சிபார்சுகளின் பிரகாரமே பாடசாலை அபிவிருத்திச் சபைகளை உருவாக்குகின்றோம். வசதிக் கட்டணத்தைத் தவிர மாணவர்களிடம் வேறெந்தக் கட்டணத்தையும் அறவிட மாட்டோம் என்பதை தெட்டத் தெளிவாகக் கூறிவைக்க விரும்புகிறேன் என்றார் அவர்.

# 25நாள்சம்பளம்வழங்ககோரி சம்பளத்தை பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

மாதத்தில் 25 நாட்கள் வேலை அல்லது அதற்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டுமெனக் கோரி நோத்மடக்கும்பர தொழிலாளர் ஜனவரி மாதச் சம்பளத்தை தொடர்ந்தும் பகிஷ்கரித்து வருகின்றனர்.

தலவாக்கலை நோத் மடக்கும்பர தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 3500 தொழிலாளர்களே இவ்வாறு கோரி சம்பளத்தைப் பெற மறுத்து வருகிறார்கள்.

மாதத்தில் 25 நாட்கள் வேலை அல்லது அதற்குரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்பது நடைமுறையில் இருந்த போதும் மேற்படி தோட்டத்தில் ஜனவரி மாதம் 18நாட்களே வேலை வழங்கப்பட்டது அத்துடன் வேலை செய்த நாட்களுக்குரிய சம்பளத்தையே தோட்ட நிர்வாகம் வழங்க முன் வந்துள்ளது. இதனை ஆட்சேபித்தே இந்த பகிஷ்கரிப்பை தொழிலாளர் மேற்கொண்டு வருகின்றனர் என்று அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# இல்ல விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித மரியாள் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ். கோட்டபிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. வேலாயுதம் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.


தொழில்நுட்பக் கல்லூரி

இறுதிப் பரீட்சை 1989, 1990, 1991

பயில்நிலை படவரைஞர்

## பயிற்சிநெறி

சென்ற ஆண்டில் நடைபெறவிருந்த மேற்படி ஆண்டுகளுக்கான இறுதிப் பரீட்சை 1993-03-08 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் ஏற்கனவே வழங்கப்பட்ட நேரசூசியின்படி நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தமக்கு வழங்கப்பட்ட மாணவர் பிரவேச அனுமதிச்சீட்டு மற்றும் பரீட்சைக்குரிய அனுமதிச்சீட்டு என்பவற்றுடன் தொழில்நுட்பக் கல்லூரிக்கு குறிப்பிட்ட தினத்தில் மு ப. 8.00 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தொழில்நுட்பக் கல்லூரி, அதிபர்
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
1993-03-02 (சி-6124)

## கண்ணீர் அஞ்சலி

அலெக்ஸ் பேக்கரி உரிமையாளர் அ. பாலசுந்தரம் அவர்களின் மரணத்தையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துவதுடன் இன்று 03-03-1993 பாண் விநியோகமும் செய்வதில்லை என்பதையும் அறியத்தருகிறோம்.

யாழ். மாவட்ட
பேக்கரிஉரிமையாளர்
சங்கம்
(யாழ். கிளை)

(4382)

## கண்ணீர் அஞ்சலி

## திரு அருளப்பு பாலசுந்தரம்

அலெக்ஸ் பேக்கரி உரிமையாளர்
ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை.

எமது சங்கத்தின் மூத்த உறுப்பினரும், நல்லூர், கோப்பாய் கிளையின்வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வந்தவருமான திரு. அருளப்பு பாலசுந்தரம்அவர்களின் அகால மரணச்செய்தி கேட்டு ஆற்றொணாத் துயர் அடைகின்றோம். இவரின் மறைவு எமது சங்கத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ் மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்
மணியம்ஸ் பில்டிங்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(4381)


# வெளியீடும் பரிசளிப்பும்

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் ''வணிக ஜோதி'' 15ஆவது மலர் வெளியீட்டுவிழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் மற்றும் விசேட அதிதிகளாக யாழ். கோட்டபிரதிக் கல்விப்பணிப்பாளர்சி. வேலாயுதம், பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா, தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை பொறுப்பாளர் வெ. இளங்குமரன் ஆகியோர் கலந்து கொள்ளுகின்றனர்.

வெளியிடப்பட இருக்கும் 15 ஆவது இம்மலர் மரணித்த மாவீரர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் சமர்ப்பணமாகின்றது

இவ்விழாவின் இறுதியில் வர்த்தக மாணவர் மன்றத்தினால் நடாத்தப்பட்ட அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகளுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளது. 1-ம் பரிசு பெறும் இலக்கம் 197, 2-ம் பரிசு பெறும் இலக்கம் 1503, 3-ம் பரிசுபெறும் இலக்கம் 0309 ஆறுதல் பரிசுகள்பெறும்இலக்கங்கள் 0068, 0069,290 என்பன ஆகும்.

# சந்தை விலை விபரம் (01.03.93)

| தொ இல | பொருட்கள் | அலகு | திருநெல்வேலி ரூ ச | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | குத்தரிசி | கி.கி | 46.00 | 50.50 | 46.00 | 46.00 | 46.00 | 47.50 | 40.00 | 47.00 |
| 02. | கோதுமைமா | ,, | 22.00 | 21.30 | 23.00 | 21.30 | 19.00 | 26.00 | 21.60 | 21.00 |
| 03. | சீனி | ,, | 55.00 | 52.00 | 55.00 | 42.60 | 45.00 | 45.00 | 47.60 | 50.00 |
| 04. | கத்தரி | ,, | 16.30 | 23.00 | 15.00 | 20.00 | 15.30 | 16.00 | 19.30 | 20.00 |
| 05. | வெண்டி | ,, | 20.60 | 27.60 | 16.60 | 11.30 | 11.30 | 12.00 | 19.30 | — |
| 06. | பாகல் | ,, | 15.30 | 19.00 | 11.30 | 20.60 | 12.30 | 20.00 | 18.30 | 17.60 |
| 07. | புடோல் | ,, | 15.50 | 21.30 | 7.60 | 11.30 | — | 12.00 | — | 13.00 |
| 08 | பயற்றங்காய் | ,, | 21.20 | 23.00 | 16.00 | 22.00 | 16.00 | 30.00 | 24.30 | 9.00 |
| 09. | தக்காளி | ,, | 15.50 | 21.80 | 18.60 | 9.50 | 9.75 | 12.50 | 13.50 | 16.15 |
| 10 | வாழைக்காய் | ,, | 23.65 | 29.00 | 20.60 | 26.60 | 25.00 | 25.00 | 19.00 | 32.30 |
| 11. | பீற்றூட் | ,, | 10.00 | 12.60 | 8.30 | — | 10,00 | 10.00 | 12.60 | 8.00 |
| 12. | தேங்காய் | ஒன்று | 31,15 | 37.30 | 32.30 | 35.00 | 32.50 | 37.50 | 29.30 | 24.80 |
| 13. | ப.மிளகாய் | கி.கி | 16.00 | 25.60 | 17.00 | 26.00 | 19.00 | 20.00 | 22.30 | 32.00 |
| 14. | எலுமிச்சை | ,, | 65.00 | 88.30 | 71.60 | 58.30 | 67.50 | 55.00 | 53.30 | 70.00 |
| 15. | வெங்காயம் | ,, | 10.00 | 11 80 | 8.30 | 9.30 | 8.00 | 9.00 | 8.60 | 9.80 |
| 16. | கப்பல்வாழைப்பழம் | ,, | 30.00 | 35.60 | 40.00 | 32.30 | 30.00 | 50.00 | 35 00 | 35.00 |
| 17 | இறால் | ,, | 110.00 | 100.00 | 80.00 | 61.60 | 100.00 | 100.00 | 96.60 | 97.50 |
| 18. | பாரை மீன் | ,, | 155.00 | 115.00 | 110.00 | 110.00 | 145.00 | 100.00 | 116.25 | 122.50 |
| 19, | சிறிய மீன் | ,, | 160.00 | 55.00 | — | 67.50 | 100.00 | 56.60 | 42.50 | — |
| 20. | முட்டை | ஒன்று | 7.25 | 8.15 | — | 8.00 | 8.50 | 9.00 | 8.60 | 7.00 |

தகவல்:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்.

நூலகம் மன்றம் யாழ்ப்பாணம்

# புதியரக டாங்கி இந்தியா பரீட்சிப்பு

(சென்னை)

இந்திய ராணுவத்தின் ''அர்ஜுன்'' என்னும் ராணுவ டாங்கி நேற்று சோதித்துப் பார்க்கப்பட்டது. இந்தியாவின் மேற்குப்பகுதியில் இந்த ராணுவ டாங்கியின் செயற்பாட்டை இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் பார்வையிட்டார்.

இந்த டாங்கிகளுக்கான ஏற்றுமதி வாய்ப்புகளை அறிந்து கொள்வதற்காக அடுத்த ஆண்டில் கனடாவில் நடைபெற இருக்கும் ராணுவ டாங்கிகண்காட்சிக்குஅர்ஜுன் டாங்கியும் அனுப்பப்படும் என சரத்பவார் தெரிவித்தார். இராணுவ தேவைகளைக்கருத்திற்கொண்டு இவ்வகை டாங்கிகள் வெகு விரைவில் பெருமளவில் தயாரிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இடப் பற்றாக்குறை மாணவர் பெரும் சிரமம்

[சுன்னாகம்]

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கும் யூனியன் கல்லூரி கொத்தணிப் பாடசாலைகளும், அருணோதயாக் கல்லூரி கொத்தணிப் பாடசாலைகளும்பெரும்இடப் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றன. ஒரே நேரத்தில் 4, 5 பாடசாலைகள் இயங்க வேண்டியிருப்பதால் சில வகுப்புக்கள் மரங்களின் கீழேயே நடப்பதை அவதானிக்க முடிந்தது. இதனால் மாணவர்களும், ஆசிரியர்களும் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். புதிதாக அமைக்கப்பட்ட சில வகுப்பறைகள் நிலமட்டத்தில் இருப்பதால், சிறிது மழை பெய்தவுடனேயே நீர் புகுவதால் மாணவர்கள் வேறிடங்களை நாடுவதையும் காண முடிந்தது. (11) (9)

# நன்றி நவிலல்

தம்பாபிள்ளை சபாபதிப்பிள்ளை

## துரையப்பா - C. C. S.


(இளைப்பாறிய O. A. யாழ். செயலகம்)

எமது அன்பிற்கும், பண்பிற்கும், பாசத்திற்குமுரிய அணைந்த குலவிளக்கு த. ச. துரையப்பா அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு வந்துதவியவர்களுக்கும், மரணக் கிரியைகளின் போது வந்துதவியவர்களுக்கும், நேரில் வந்தும், அனுதாபச் செய்தி அனுப்பியும் எமக்கு ஆறுதல் நல்கியமைக்காகவும், அன்னாரின் வீட்டுக்கிருத்தியத்தில் கலந்து ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்தமைக்காகவும் எமது நன்றிகள்.

'கேதீஸ்வரம்' மனைவி:- பாலாம்பிகை, சகோதரி,
ஆனைக்கோட்டை. பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(4378)

# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப் பிறப்பு 16 – 04 – 1965

வீரச் சாவு 3 – 03 – 1989

## மேஜர் அரி
## (சாந்தலிங்கம் பிரேமஸ்ரீ)

(வத்திராயன் மத்தி, தாளையடி)

அன்னியர் முற்றுகையில் முன் நின்றாய்
அலம்பில் காட்டில் களம் கண்டாய்
நாயாறு மண் உன்னை வாயாரப் புகழ
நாமும் கூடி அஞ்சலிக்கின்றோம் இன்று.

— வத்திராயன் மத்தி
விளையாட்டுக்கழகம்,
தாளையடி.

(4371)

# தையல் கண்காட்சி

(தொல்புரம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினது வலிகாமம் மேற்குப் பிரிவினால் தையல் கண்காட்சியும் விற்பனையும் நடாத்தப்படவுள்ளன.

மேற்படி தையல் கண்காட்சி வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாசாலை கனிஷ்ட பிரிவு மண்டபத்தில் எதிர்வரும் ஆறாந் திகதிசனிக்கிழமை காலை 9. மணி தொடக்கம் மாலை 5.30மணி வரையும், மறுநாள் ஏழாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரையும் நடைபெறும்.

மேலும் தையல் கண்காட்சி நடக்கும் போது பொருள்களை மலிவு விலையில் விற்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமென கண்காட்சிச் செயற்குழு உறுப்பினர் திரு. சி. சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். (34)

# பிரார்த்தனை

மட்டுவில் கல்வம் - சிவன் ஆலயத்தில் நடைபெற்றுவரும் தொடர் பிரார்த்தனையின் 2-ம் மண்டல நிறைவை (90-ம் நாள்) முன்னிட்டுகடந்தவெள்ளிக்கிழமை காலை தேவார பாராயணமும் ''வேதாகம சோதிட பூஷணம் சிவஸ்ரீ சி. சிதம்பரநாதக் குருக்கள், ஓய்வு பெற்ற அதிபர் திரு க. இராசரத்தினம் ஆகியோரின் சொற்பொழிவும் இடம் பெற்றது. மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தினர் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டனர்.

# கண்டெடுப்பு

(கொழும்புத்துறை)

பெறுமதி மிக்க பொருள் ஒன்று கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதியில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலய அதிபர் திரு. வி. மாணிக்கம் அவர்களைப் பாடசாலை நேரத்தில் நேரில் வந்து காரியாலயத்தில் உரிய அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

★

(யாழ்ப்பாணம்)

''வணிக ஜோதி மலர் வெளியீட்டு விழா'' அழைப்பிதழ்கள் சில வீதியில் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் நேரில்வந்து பெற்றுக்கொள்ளவும்.

# சிறுவன் பலி

(சுன்னாகம்)

கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்தபோது கயிறு அறுந்ததனால் கிணற்றினுள் தவறி வீழ்ந்த சிறுவனொருவன் மரணமான பரிதாப சம்பவம் கடந்த 28ஆம் திகதி நடைபெற்றது.

இணுவில் மத்திய கல்லூரியில் கல்வி கற்கும் சின்னத்தம்பி ரமணன் [வயது 11] என்ற சிறுவனே இப்பரிதாப மரணத்தைத் தழுவிக் கொண்டவர். நீரில் மூழ்கியிருந்ததனால் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும்போது இடைவழியில் மரணமானார். [11], [09]

உ

'அன்று அறிவாம்' என்னாது அறம் செய்க; மற்று அது பொன்றுங்கால் பொன்றாத்துணை.

# விநாயகர் தரும நிதிய அச்சகம்

வியாபாரி மூலை, பருத்தித்துறை.

03-03-93 இன்றுகாலை 7.30 மணி தொடக்கம்காலை9 மணிவரையுள்ள சுப வேளையில்அஷ்டலக்சுமி உரிமையாளர் திரு. ஆறுமுகம் கந்தையா சமாதான நீதவான் அவர்களால் எமது மேற்படி ஸ்தாபனம் திறந்து வைக்கப்படுகின்றதென்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

சிறந்த முறையில் அச்சு வேலைகள் நிதான கட்டணத்தில் செய்து கொடுக்கப்பெறும்

புலோலி மேற்கு, நிறுவனர், உறுப்பினர்கள்
பருத்தித்துறை. விநாயகர் தருமநிதியம்

(4372)

# நன்றி

1993-2-26 வெள்ளிக்கிழமை இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் நடைபெற்ற எனது புல்லாங்குழல் இசை அரங்கேற்றத்தின் போது ஆசியுரை வழங்கிய பெரியோர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய அறிஞர்களுக்கும். எனது கச்சேரி நன்கு அமைய உறுதுணையாயிருந்த அணி செய் கலைஞர்களுக்கும் என்னைக் கௌரவித்த உறவினர்கள்நண்பர்கள், இரசிகப்பெருமக்கள்ஆகியோருக்கும், இளங்கலைஞர்மன்றத்தினருக்கும், ஒலி ஒளி அமைப்பாளர்களுக்கும், எக்ஸ்போ வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கும் மற்றும் எனது நிகழ்ச்சி இனிது நிறைவேற உதவிய எல்லோருக்கும்எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்
வி. கே. பஞ்சமூர்த்தி
கோண்டாவில். நாதஸ்வரவித்துவான்

(4380)

# ஈராண்டு நினைவஞ்சலி



## சவரிமுத்து இராயப்பு
## (வீரசிங்கம்)

பிறப்பு: 8.11.1918 இறப்பு: 3.3.1991

அன்பான ஐயா!

நீர் எமக்களித்த பந்தமும், பாசமும் பற்றுறுதிகளாக நிதம் உமக்கு எமதஞ்சலிகள்.

தங்கள் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

783, கடற்கரை வீதி
பாஷையூர்
யாழ்ப்பாணம். மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி-6127)

மீண்டும்
யாழ். நவீன சந்தை முன்பாக
புதிய சுவையுடன்
தரம் மிகு
கோழிப் பிரியாணி

றிக்கோ

370, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

(சி-6122)

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு

நேர்மையானதைச் செய்யவிரும்பும் போது மட்டும் அல்லாது, தன்விருப்பப்படி செய்யும் உரிமை எந்த மனிதனுக்கும் இல்லை.

— சார்லஸ் ஸிம்மன்ஸ்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03- 03- 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

## போராட்டம் ஏன்?

பெருந் தோட்டங்கள் தொடர்பாக பிரேமதாசா அரசாங்கம் கடைப்பிடித்துவரும் கொள்கையைக் கண்டித்து பெரும் வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்தப்போவதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் அறிவித்துள்ளார். தோட்டங்கள் தனியார் மயப்படுத்தப்பட்டமையையும், தொழிலாளர்களின் உரிமைகள் மீறப்படுதல் குறித்தும் நிர்வாகத்தினரின் அடாவடித்தனத்தை கண்டித்தும் நேற்று ஆரம்பித்துள்ள இப்போராட்டத்தில் 35 தோட்டங்களைச் சேர்ந்த 20,000 தொழிலாளர்கள் பங்குபற்றுகின்றனர். இப்போராட்டத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள் செவிசாய்க்காது போனால், படிப்படியாக போராட்டம் விஸ்தரிக்கப்பட்டு மலையகம் ஸ்தம்பிதநிலையை அடையும் என இ.தொ.கா.செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான செல்லச்சாமி அறிவித்துள்ளார்.

இ. தொ. காவின் இத்திடீர் அறிவிப்பானது அரசியல் வட்டாரங்களில் சில முக்கிய கேள்விகளை எழுப்பியுள்ளது. ஐ. தே. கட்சி அரசிற்கும், இ.தொ.கா.விற்குமிடையில் நிலவியநல்லுறவு முறிவடைந்து விட்டதா? தோட்டத் தொழிலாளருக்கு எவ்வளவோ இன்னல்கள் வந்தபோதும் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தாத இ. தொ. கா. இப்பொழுது போராட்டம் நடத்த முடிவுசெய்தது ஏன்? என்பவையே அக்கேள்விகளாகும்.

இ.தொ.காங்கிரஸ் முன்எப்பொழுதும் இல்லாத அளவிற்கு இன்று பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியுடன் பல வருடங்கள் இணைந்து செயற்பட்டதினால், இக்கட்சி தனது தனித்துவத்தை இழந்துவிட்டதோடு, இ. தொ. காவின் அடிப்படைத்தளமாகவுள்ள தொழிலாளர் நலனில் அக்கறை காட்டாமல் விட்டதினால், அதன் அங்கத்தவர்கள் பெருமளவு வெறுப்புக்கொண்டுள்ளனர்.

அத்தோடு, மலையகத்தில் இன்று குறிப்பிடக்கூடிய வளர்ச்சியைக் கண்டுள்ள ஐக்கியதேசியக் கட்சியின் தொழிற்சங்கங்களும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தொழிற்சங்கமும், இ.தொ.கா.விற்கு பெரும் சவாலாக உள்ளன. இ.தொ.காவும், கடந்தகாலத்தில் அரசுசார்பு கொள்கையைக் கடைப்பிடித்ததினால், தொழிலாளர்களும் அக்கட்சிகளுடன் தொடர்புகளை வலுவாக ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

மேலும், இ தொ.கா. தலைவர் தொண்டமான் கட்சியை தனது இஷ்டத்திற்கு வழிநடத்திச் செல்வதாகவும் தனது வாரிசுகளை கட்சியின் உயர் பதவியில் அமர்த்துவதற்கு முற்படுவதாகவும் பலமான குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இதனைக் காரணம்காட்டி இ.தொ.காவின் பல இடைநிலை அதிகாரிகளும், ஆயிரக்கணக்கானதொண்டர்களும் கட்சியைவிட்டுவெளியேறி ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் தொழிற்சங்கத்தில் இணைந்து கொண்டுள்ளனர்.

இச்சூழ்நிலையில்தான் இ. தொ. கா. தற்பொழுது அரசிற்கெதிரான போராட்டத்தை அறிவித்துள்ளது. ஆகையினால் இ. தொ. காவின் இப்போராட்டம் உண்மையில் அறிவிக்கப்பட்ட காரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றதா என்பதே இன்றுள்ள சந்தேகமாகும்.

ஏனெனில், அரசு தோட்டங்களை தனியார் மயப்படுத்தியதும், புதிய நிர்வாகம் தொழிலாளர் நலன்களுக்கு முரணான வகையில் செயற்படுவதும், நேற்று நடைபெற்ற புதியவிடயம் அல்ல. ஒரு வருடத்திற்கு மேலாக இடம்பெற்றுவரும் ஒன்றே.

இது குறித்து சில போராட்டங்களை ஏனைய தொழிற்சங்கங்கள் நடத்தியபோதும் அவைவெற்றி பெறவில்லை. இதற்கு இ.தொ. கா.அரசின் பக்கம் நின்றதே காரணமாகும். இதனால் தற்பொழுது இ. தொ. கா. அறிவித்துள்ள போராட்டம், தொழிலாளரின் நலனுக்கான போராட்டம் என்பதைவிட இ. தொ. கா. தலைவர்கள் தமது நிலையை உறுதிப்படுத்திக்கொள்ள நடத்தும் போராட்டம்என்றே கூறலாம்.

## கருத்தரங்கு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் கல்வி நிலையம் நடாத்தும் மாதாந்தக் கருத்தரங்கு இன்று முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும். திரு. என். விஜயசுந்தரம் (யாழ். பல்கலைக்கழக கலைப்பீடமாணவன்) ''வள்ளுவனின் நெறியில் வாழ்வு' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

### நிவாரணம் விநியோகம்

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்கான பெப்ரவரிமாத, முதல்இரண்டு வார இலவச உலர் உணவுப் பொருள்கள் நேற்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் சங்க நிவாரணக் கிளைகளில் விநியோகிக்கப்படுவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (22)

## நெருப்புக் காய்ச்சல்

[யாழ்ப்பாணம்]

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் தற்போது நெருப்புக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகின்றது. சிறுவர்களே பெரும்பாலும்இக்காய்ச்சலால் பீடிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட நேரங்களுக்கு நடுக்கத்துடன் விட்டு விட்டு வரும் இக்காய்ச்சல் பிள்ளைகளை 'வாட்டி வதைத்து'விடுவதாக குடியிருப்பைச் சேர்ந்த தாய்மார் சிலர் தெரிவித்தனர். [22]

## உணவுமுத்திரைக்கு அரிசி

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக புனர்வாழ்வுப் புனர் நிர்மாணப் பகுதி தமது கையிருப்பில் இருந்து 600 மெற்றிக்தொன் அரிசியை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கியுள்ளது

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இதுவரை 200 லொறிகளில் 600 மெற்றிக் தொன் அரிசி வழங்கப்பட்டுள்ளதாகவும், உணவு முத்திரைகளுக்கு இம் முறை அரிசி வழங்கப்படவுள்ளதாகவும் யாழ். செயலக புனர்வாழ்வு புனர் நிர்மாண பகுதியினர்தெரிவித்தனர். (சி)

## பணிசினுள் உலோகம்

[தென்மராட்சி]

தென்மராட்சி, வரணி பகுதியிலுள்ள கடையொன்றில் கொம்பு பணிஸ் உண்டவர் தொண்டைப் பகுதியிலிருந்து வெளியேறிய இரத்தக் கசிவின் காரணமாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த பணிசினுள் உலோகப் பொருள் ஏதாவது இருந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

மேற்படி சம்பவத்தில் வரணி இயற்றாலையைச் சேர்ந்த செ. தர்மகுலசிங்கம் [வயது 30] என்பவரே யாழ். மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். [86]

## க. பொ. த. பரீட்சை முடிவு அடுத்த மாதமே வெளிவரும்

(யாழ்ப்பாணம்)

1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. (சா/த.) பரீட்சையின் யாழ். குடாநாட்டுப் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அடுத்த மாதமளவிலேயே வெளியாகுமென எதிர்பார்க்கப்படுவதாக யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்பரீட்சையின் விடைத் தாள்கள் திருத்தும் வேலைகள் இன்னும் முடிவடையாமையினாலேயே மேற்படி பெறுபேறுகள் ஏனைய இடங்களைவிட தாமதமாகுமென தெரியவருகின்றது.

இப்பரீட்சையின் விடைத் தாள்கள் கப்பல் போக்குவரத்து சீரின்மை மற்றும் பாதுகாப்பு இன்மை காரணமாக பரீட்சை முடிவடைந்து சுமார் ஒரு மாத காலம் தாமதித்து பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. (பா)

## 1000 பட்டதாரிகளுக்கு மொழி பெயர்ப்பாளர் பதவி

(கொழும்பு)

அரசாங்க, மாகாண மற்றும் நீதி நிறுவனங்களில் சுமார் ஆயிரம் பட்டதாரிகள் மொழி பெயர்ப்பாளர்களாக நியமிக்கப்படவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படுகின்ற போட்டிப்பரீட்சை ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுவர் எனவும், விண்ணப்பங்கள் இம்மாதம் 12-ம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும் எனவும் பரீட்சை ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## புலிகளுடன் பேச்சுநடாத்த ஐ. நா. பிரதிநிதி வருவார்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய அதிகாரியான திரு. பீற்றர் நிக்கலஸ் இவ்வார இறுதியில் யாழ்ப்பாணம் வந்து சேருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டுக்கான பொதுமக்களின் போக்குவரத்துக்களை ஏற்படுத்துவது குறித்து இவ் அதிகாரி விடுதலைப் புலிகளுடன் பேசுவார். இவ் விடயம் குறித்து விடுதலைப் புலிகள் ஏற்கனவே தெரிவித்த சில ஆலோசனைகள் குறித்து இவ் அதிகாரி அரசின் உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். இவ் ஆலோசனைகளின் விளைவு குறித்து விடுதலைப் புலிகளுக்கு எடுத்துரைக்கப் படவிருக்கிறது. (சு)

## மகிழடித்தீவு படுகொலை படை மீது 83 குற்றச்சாட்டு

[மட்டக்களப்பு]

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் மகிழடித்தீவு கிராமத்தில் நடைபெற்ற படுகொலை தொடர்பாக 23 இராணுவத்தினர் மீது 83 குற்றச்சாட்டுக்கள் உள்ளதாக மட்டக்களப்பு நீதிமன்ற உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி கிராமத்தில் 30 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக மேற்படி குற்றச்சாட்டுகள் உள்ளதாகவும், வழக்கு விசாரணை தொடர்பாக மட்டக்களப்பு நீதிமன்றத்தில் எதுவும் அசம்பாவிதம் நிகழலாம் என்பதற்காக முன்கூட்டியே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பழுதடைந்த ஜெனரேற்றர் திருத்துவதில் தாமதம்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து பழுது பார்ப்பதற்காக கொழும்புக்கு அனுப்பப்பட்ட இரண்டுபாரிய மின்பிறப்பாக்கிகள் பல மாதங்களாகியும் திரும்பி வரவில்லை.

யாழ் போதனா வைத்திய சாலையின் பாவனையில் இருந்து பழுதுபட்ட 55 கிலோவாற், 27 கிலோ வாற் மின் பிறப்பாக்கிகள் திருத்துவதற்காக கொழும்பிற்கு அனுப்பப்பட்டன. ஆனால் அவை இதுவரை யாழ் போதனா வைத்தியசாலைக்கு திருப்பி அனுப்பப்படவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. [சி] [நி]

## 500 பீப்பா மண்ணெய் 'வாதுவ' கப்பலில் வரும்

(கொழும்பு)

வடக்கிற்கு கூடுதலான அத்தியாவசிய உணவுப் பொருள்களை அனுப்பிவைக்க சிறிலங்கா அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'குமண என்ற கப்பல் அரிசி, மா, சீனி, மண்ணெண்ணெய், மருந்துப் பொருள்கள் மற்றும் தானியங்களுடன் இன்று கொழும்பு துறைமுகத்திலிருந்து புறப்படவுள்ளதாகவும் இது இவ்வார இறுதியில் பருத்தித்துறையை சென்றடையும். எனவும்புனர்வாழ்வு புனர் நிர்மாண சமூக நலத்துறை அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்

கொழும்புத் துறைமுகத்தில் தரித்துநிற்கும் ''வாதுவ'' எனும் கப்பலில் 500 பீப்பா மண்ணெண்ணெயும் அத்தியாவசிய உணவுப் பொருள்களுமாக 3900 மெற்றிக் தொன் ஏற்றப்படுவதாகவும் இக்கப்பல் அடுத்த வாரமளவில் கொழும்பிலிருந்து பருத்தித்துறை நோக்கி புறப்படவுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னதாக 'நில்கிரி' கப்பலில் 1500 பீப்பா மண்ணெண்ணெய் ஏற்றப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்தமை தெரிந்ததே.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 02-03-1993

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 8444

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்

26-1741, 26-8052, 26-6075, 26-5782, 24-4701, 26-5760, 27-1531, 28-2049, 41-9791, 41-8629, 41-8626, 26-5046, 27-1542, 42-2762, 24-5623, 26-1745.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கம்

40-2573, 24-2496, 28-4672, 26-355, 24-3906, 27-6583, 26-4885, 41-9997, 26-3495, 27-9707, 26-9703, 40-1516, 24-5707, 42-266, 24-8429, 27-382.

தாயகமும்

மனிதாபிமான அடிப்படையில் இதையாவது செய்யுமாறு ஐ. நா. தூதரகம் சிறிலங்கா அரசுமீது அழுத்தம் பிரயோகிக்கலாம் அல்லவா?

# தனிமாகாண சமஷ்டியை ஏற்றுக்கொள்ள முடியாது

**கேள்வி:-** தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வழிமுறைகள் பற்றி ஆராய்வதற்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்ற சிறப்புக் குழு, தனிமாகாண அடிப்படையிலான சமஷ்டி அமைப்புத் திட்டமொன்றை முன்வைக்கப்போவதாக நம்பப்படுகிறது. அப்படியானதோர் சமஷ்டி அமைப்பை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?

**பதில்:-** தனிமாகாண சமஷ்டி அமைப்புத் திட்டத்திற்கு கொழும்பிலுள்ள அரசாங்க சார்பான தமிழ் குழுக்களே கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளன.

எனவே, இப்படியான ஒரு திட்டத்தை அதாவது, தமிழர் தாயகத்தைக் கூறுபோடும் திட்டத்தை நாம் எப்படி ஏற்றுக்கொள்வது?

**கேள்வி:** வடபுலமும் கிழக்கு மாகாணமும் இணைக்கப்பட்டதோர் சமஷ்டி அமைப்பு திட்டமொன்று முன்வைக்கப்பட்டால் அத் திட்டத்தை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?

**பதில்:** தமிழர் தாயகத்தின் பூகோள முழுமை அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டி அமைப்புமுறை முன்வைக்கப்பட்டால் அதனை பரிசீலனைசெய்ய நாம் தயார். சமஷ்டி ஆட்சிமுறை பல வடிவங்களில் உள்ளன. இவற்றில் அதிகாரப் பரவலாக்கமும் வெவ்வேறு பரிமாணங்களில் அமையப்பெற்றுள்ளன. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்திசெய்யும் வகையில், தன்னாட்சி அதிகாரங்கள் அமையப்பெற்ற ஒரு சமஷ்டி ஆட்சித்திட்டம் முன்வைக்கப்பட்டால் அதனை நாம் பரிசீலனை செய்வோம்.

# முஸ்லிம் மக்கள் பற்றிய புலிகளின் நிலைப்பாடு

**கேள்வி:** முஸ்லிம் மக்கள் குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன?

**பதில்:** முஸ்லிம் மக்கள், தனித்துவப் பண்பாடுடைய ஓர் இனக் குழு என்ற வகையில் அவர்களது பிரச்சினை அணுகப்பட வேண்டும். முஸ்லிம் மக்களின் தனித்துவம், நில உரிமைப்பாடு பேணப்படும் அதேவேளை அவர்கள் தமிழ் மக்களுடன் ஒன்றிணைந்து வாழ்வதே அவர்களது சமூக, அரசியல், பொருளாதார வாழ்வை சிறப்பிக்கும் என நாம் கருதுகிறோம்.

சிங்களப் பேரினவாதிகளும், சுயநலம் கொண்ட முஸ்லிம் அரசியல்வாதிகளும், தமிழ் - முஸ்லிம் மக்களிடையே வேற்றுமையையும், விரோதத்தையும் வளர்த்துவிட முயற்சிக்கிறார்கள். இந்தச் சூழ்ச்சிகளுக்கு முஸ்லிம் மக்கள் பலிக்கடா ஆகக் கூடாது.

**கேள்வி:** யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்களை ஏன் வெளியேற்றினீர்கள். அவர்களும் யாழ்ப்பாண மக்கள் தானே?

**பதில்:** 90 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் இனக் கலவரம் வெடித்து பெரும் தொகையில் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட பொழுது யாழ்ப்பாணத்திலும் கலவரம் பரவும் ஆபத்து எழுந்தது. அந்தவேளையில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பைக் கருதி நாம் அவர்களை யாழ்ப்பாணத்திலிருந்து தற்காலிகமாக வெளியேறுமாறு கேட்டுக்கொண்டோம் ஆயினும் யுத்தம் முடிவடைந்து, சமாதான சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் அவர்களை மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியமர அனுமதிப்போம்.

**கேள்வி:-** வட புலத்திலும், கிழக்கு மாகாணத்திலும் சிங்கள மக்கள் வந்து குடியேறுவதை நீங்கள் எதிர்க்கிறீர்கள். நாட்டின் எந்தப் பகுதியிலும் சென்று வாழ தமிழ் மக்களுக்குள்ள உரிமை சிங்கள மக்களுக்கும் உண்டல்லவா?

**பதில்:-** சிங்கள மக்கள் தமிழ்ப் பகுதிகளில் குடியமர்வதை நாம் எதிர்க்கவில்லை.

தமிழ்ப் பகுதிகளில் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றத்தையே நாம் எதிர்க்கிறோம்.

தமிழ்க் கிராமங்களிலிருந்து தமிழ் மக்கள் விரட்டப்பட்டு அங்கு சிங்கள குடியேற்றம் இடம்பெறுகிறது. தமிழர் தாயகத்தைத் துண்டாடி, சிதைத்துவிடும் நோக்கில் இக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன. இத்தகைய திட்டமிடப்பட்ட குடியேற்றங்களையே நாம் எதிர்க்கிறோம்.

# இந்திய அரசாங்கத்தின் தவறான அச்சங்கள்

**கேள்வி:-** இந்தியா புலிப்படையினருக்கு எதிராக எடுத்துவரும் கடுமையான நடவடிக்கைகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:-** தமிழரின் விடுதலைப் போராட்டம் சம்பந்தமான ஒரு தவறான, மிகைப்படுத்தப்பட்ட அச்சத்தின் காரணமாகவே இந்தியா எம்மீது கடுமையான போக்கை கடைப்பிடிக்கிறது. எமது சுதந்திரப் போராட்டம் தமிழ் நாட்டில் பிரிவினைவாதத்தை தூண்டிவிடும் என்றும், இந்திய தேசிய போராட்டங்களுக்கு ஊக்க சக்தியாக அமைந்துவிடும் என்றும், இந்தியா அஞ்சுகிறது. இந்த தேவையற்ற, மிகைப்படுத்தப்பட்ட பயத்தின் காரணமாக, கடந்த பத்து ஆண்டுகளாக, இந்திய அரசு எமது போராட்டத்தில் பல்வேறு வழிகளில் குறுக்கிட்டும் தலையிட்டும் வருகிறது. தமிழரின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் எமது இயக்கத்தை அழித்துவிடவும் கங்கணம்கட்டி நிற்கிறது.

இனப்படுகொலையை எதிர்த்து நிற்கும் ஒரு நியாயபூர்வமான போராட்டத்தை தவறாகப் புரிந்து, இந்திய அரசு எடுத்துவரும் அநீதியான நடவடிக்கைகளால் நாம் பெரிதும் பாதிப்படைந்துள்ளோம். எமது மக்களின் நிலையும் மோசமாகி வருகின்றது இந்தியாவின் விரோதமான அணுகுமுறை காரணமாக சிங்கள அரசு ஊக்கம்பெற்று, தயவுதாட்சண்யமின்றி இனக்கொலையைத் தீவிரப்படுத்திவருகிறது.

**கேள்வி:** புலிப்படைக்குள் கருத்துவேற்றுமைகள், பதவி நீக்கங்கள் எழுந்துள்ளதாக ஊகங்கள் எழுந்துள்ளன. உண்மையா?

**பதில்:** இது உண்மையல்ல. எமது இயக்கத்தில் கருத்து வேற்றுமைகள் தோன்றிவிடவில்லை. எமது அமைப்பில் சில மாற்றங்கள்கொண்டு வரப்பட்டுள்ளன சில மூத்த உறுப்பினர்களின் பொறுப்புகள் மாற்றப்பட்டுள்ளன. இதனைத் தவறாகப் புரிந்து சில ஊகங்கள் எழுந்திருக்கலாம்.

# சமாதான திட்டத்துடன் கிட்டு யாழ். பயணமானார்

**கேள்வி:** கிட்டு யாழ்ப்பாணப் பயணம் மேற்கொண்டதற்குக் காரணம் என்ன?

**பதில்:-** தமிழீழத்தில் ஒரு சமாதான சூழ்நிலையை உருவாக்கி, தமிழர் பிரச்சினை சம்பந்தமாக பேச்சுக்களை ஆரம்பிக்கும் மேற்குலக நாடுகளின் சமாதானத் திட்டத்துடன் அவர் யாழ்ப்பாணப் பயணத்தை மேற்கொண்டார். இத்திட்டம் பற்றி எம்முடன் கலந்தாலோசனை நடத்தவே அவர் இங்குவர முயற்சித்தார். அவரது பயணத்தின் நோக்கத்தை குவேக்கர்ஸ் சமாதான நிறுவனம் ஊர்ஜிதம் செய்திருக்கிறது.

**கேள்வி:-** கிட்டுவின் மரணம் பற்றி உங்களின் உணர்வலைகள் என்ன?

**பதில்:-** என்னை ஆழமாகப் பாதித்த உணர்வலைகளை வார்த்தைகளில் விபரிக்க முடியாது.

கிட்டு ஒரு தலைசிறந்த தளபதி. ஆற்றல்கள் நிறைந்த ஓர் இலட்சியப் போராளி. ஒரு மகத்தான செயல் வீரன். கிட்டுவின் மறைவு, எமது இயக்கத்திற்கு மட்டுமன்றி எமது தேசத்திற்கே ஒரு பேரிழப்பாகும்.

# மக்களின் சுதந்திரமே எனது ஆன்ம இலட்சியம்

**கேள்வி:-** கடந்த பத்து ஆண்டுகளாக நீண்டுகொண்டிருக்கும் இந்தப் போருக்கு சமாதான வழிமுறைகள் மூலம் தீர்வு ஏற்படுமா?

**பதில்:-** எமது பிரச்சினைக்கு சமாதான வழிமூலம் தீர்வு ஏற்படுவதாயின் சிங்களப் பேரினவாத ஆட்சியாளரின் மனோநிலையிலும் அணுகுமுறையிலும் ஓர் அடிப்படையான மாற்றம் ஏற்படவேண்டும். அப்படியான மாற்றம் நிகழுமானால் சமாதான வழிமுறையில் எமது பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுமென நம்புகிறேன்.

**கேள்வி:** பிரபாகரன் அவர்களே! சமாதான முயற்சிகளில் ஆத்மபூர்வமாக இறங்க நீங்கள் தயாரா? இதற்கு உங்கள் நிபந்தனைகள் என்ன?

**பதில்:** சமாதானத்தை நான் ஆத்மபூர்வமாக விரும்புகிறேன். எனது மக்கள் நிம்மதியாக, சமாதானமாக, சுதந்திரமாக, கௌரவமாக வாழ வேண்டும் என்பதே எனது ஆன்மீக இலட்சியம்.

சமாதானத்திற்கு நாம் எவ்வித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. சிங்கள அரசுதான் சமாதானத்திற்கும் பேச்சுவார்த்தைகளுக்கும் நிபந்தனைகளை விதித்துக்கொண்டிருக்கிறது.

## வடமராட்சி வடக்கில் மாவீரர் நினைவுக் கூட்டம்

(வடமராட்சி)

வடமராட்சி வடக்கு கடற்புலிகள் பிரதேசத்தில் இதுவரை காலமும் தை, மாசி மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான நினைவுப் பேருரைக் கூட்டம் கடந்த 28-ம் திகதி இரவு 8 மணிக்கு சக்கோட்டை புனித சவேரியார் ஆலய முன்றலில் வடமராட்சி வடக்கு கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. வரதன் தலைமையில் நடைபெற்றது.

சக்கோட்டை கடற்தொழிலாளர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இக் கூட்டத்தில் மாவீரர்களுக்கு பெற்றோர் மலர் மாலையிட்டு தீபஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து வடமராட்சி கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. தம்பி ஈகைச்சுடர் ஏற்றி வைத்தார். மறைந்த மாவீரர்களையும், பொதுமக்களையும் நினைவு கூர்ந்து 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ். மாவட்ட கடற்புலிகள் பொது நிர்வாக பொறுப்பாளர் திரு. மறவன் மாஸ்டர், யாழ். மாவட்ட கலை, பண்பாட்டுப் பொறுப்பாளர் திரு. தேவர், வடமராட்சிக் கோட்ட கடற்புலிகள் மகளிர் பொறுப்பாளர் செல்வி பூரணி, கடற்புலிகள் யாழ். மாவட்ட உதவிப் பொறுப்பாளர் செல்வி சுகிதா உட்படப்பலரும் நினைவுப்பேருரை நிகழ்த்தினர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(யோ)

## தடுப்பூசி ஏற்றுதல் இடைநிறுத்தம்

நாவலர் வீதி, பிறவுண் வீதி சந்தியில் அமைந்துள்ள அரசாங்க கால்நடை வைத்திய சாலையில் கோழிகளுக்கு தடுப்பூசி போடும் வேலைகள் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

நோய்த்தடுப்பூசி கையிருப்பு முடிவடைந்துள்ளதாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (42)

## கிரிக்கட் போட்டி சென். பற்றிக்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் யாழ். இந்துக்கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவு வருடாந்த கிரிக்கட் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி இனிங்சாலும் 31 ஓட்டங்களாலும் வெற்றிபெற்றுள்ளது.

சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இடம் பெற்ற இவ்ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி முதல் இனிங்ஸ்சில் 98 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்சில் 91 ஓட்டங்களையும் பெற்றது.

சென். பற்றிக்ஸ் கல்லூரி முதல் இனிங்சில் 4 விக்கட் இழப்பிற்கு 220 ஓட்டங்களைப் பெற்றது.

## தொழிலாளி காயம்

'மெரினால்' கப்பலில் அரிசி மூடை இறக்கிக்கொண்டிருந்த தொழிலாளியொருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். செ. பாலசிங்கம் என்ற தொழிலாளியே இவ்வாறு காயமடைந்தவராவார்.

## முல்லை மாவட்டத்தில் அகோர பீரங்கித் தாக்கு

(முல்லைத்தீவு)

கடந்த இரண்டு நாளாக முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை, அளம்பில் பகுதிகளை நோக்கி இரண்டு கடற்பீரங்கிப் படகுகள் மூர்க்கத்தனமான பீரங்கித் தாக்குதல்களை நடத்தின.

நேற்று முன்தினம் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரையும், நேற்று காலை 10 மணி தொடக்கம் மதியம் ஒரு மணிவரையும் மேற்படி தாக்குதல்கள் கரையோரத்தை அண்டிய பகுதிகளில் நடைபெற்றன.

கரையோரத்தில் பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தமையினால் பல தென்னை மரங்கள் முறிந்து விழுந்தன. மக்கள் அச்சம் காரணமாக வெளியேறியமையினால் பாரிய உயிர்ச் சேதங்கள் தவிர்க்கக் கூடியதாக இருந்ததாக தெரியவருகின்றது.

## சமஷ்டி ஆட்சிமுறை தெரிவுக்குழு முன்வைக்கும்

-பிரட்மன்

(கொழும்பு)

சமஷ்டி ஆட்சிமுறை பாராளுமன்றத் தெரிவுக் குழுவினால் முன்வைக்கப்படலாம் என்று பல தரப்புகளில் பேசப்படுகிறது என்று ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது பேட்டியில்,

அரசியல் அமைப்புச் சட்டவிதிகளில் உள்ளபடி எமது ஆட்சிமுறை ஒற்றை ஆட்சி அமைப்பாகும் அதில்மாற்றம் செய்வதென்றால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதோடு மக்களின் ஒப்புதலையும் பெறவேண்டும் என்றார். இது ஒரு சிக்கலான ஒழுங்குமுறை என்றும் அவர் தெரிவித்தார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர், வடக்கிலிருந்து கிடைக்கும் தகவல்களின் படி, புலிகள் தீர்வொன்றுக்கு வர விரும்புவதாகத் தெரியவருகிறது. ஜூன் 1990 இல் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிக்க புலிகள் விரும்புவதாகவும் தெரிவித்தார்.

**உளவாளிகள் !!!**

**அவதானமாக இருக்கவும்...!**

மண்ணைக் காதல் செய்வோம், மறவர்தினம் போற்றிடுவோம்,

எம்மை மறந்து எதையும் பேசமாட்டோம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.